[2022 ஜனவரி 6

8—

தொழிற்பூங்கா

***9750—திரு. கடம்பூர் ராஜூ:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவில்பட்டி தொகுதி, கோவில்பட்டியில் தொழிற்பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கோவில்பட்டி தொகுதி, கோவில்பட்டியில் தொழிற்பூங்கா (Industrial Park) *அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜூ அவர்கள்.*

திரு. கடம்பூர் ராஜூ: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கும் மற்றும் அனைத்து உறுப்பினர்களுக்கும் புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு அம்மாவின் அரசில், மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையில், கடந்த ஆட்சியில்,* Startup Policy, *புத்தாக்க தொழில் கொள்கை கடந்த ஆண்டு உருவாக்கப்பட்டது. இந்த ஆட்சியில்* Tamil Nadu Startup and Innovation Mission (TANSIM) *உருவாக்கியுள்ளதாக நான் அறிகிறேன். அதன்மூலமாக கோவில்பட்டியில், தீப்பெட்டித் தொழில், பட்டாசுத் தொழில், பஞ்சாலைத் தொழில், கடலை மிட்டாய்க்கு புவிசார் குறியீடு பெறப்பட்டு, அந்தத் தொழில்கள் முதன்மையான தொழில்களாக உள்ளன. மேலும், சிறுதானியங்கள், பருத்தி, மிளகாய் மற்றும் காய்கறிகள் ஆகியவை மானாவாரிப் பகுதியில் உற்பத்தி செய்யப்படுகின்றன.*

கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் அதிகளவில் உள்ளன. எனவே, இளைஞர்களின் வேலைவாய்ப்பினையும், நாளும் பொழுதும் வளர்ந்து வருகின்ற கோவில்பட்டி நகரத்தினைக்

2022 ஜனவரி 6]

கருத்தில்கொண்டும், கோவில்பட்டியில் தொழிற்பூங்கா அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென அன்புடன் வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்பட்டி சட்டமன்றத் தொகுதி அமைந்திருக்கக்கூடிய தூத்துக்குடி மாவட்டத்தில், ஏற்கெனவே தூத்துக்குடியில் SIPCOT 1 மற்றும் 2 நிலைகளிலே, ஏறத்தாழ 2,309 ஏக்கர் பரப்பளவில் தொழிற்பூங்காக்கள் அமைக்கப்பட்டு, அங்கே வெளி மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, தொழிற்சாலைகள் அமையப்பெற்றுள்ளன. இப்போது மீண்டும் தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் வட்டத்தில், சிராநத்தம், அல்லிக்குளம் போன்ற ஆறு கிராமங்களிலே, ஏறத்தாழ 2,233 ஏக்கர் பரப்பளவில் SIPCOT 1, 2 நிலைகளிலே இன்றைக்கு தொழிற்பூங்காக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதைத் தவிர, அதே மாவட்டத்தில் விளாத்திகுளம் வட்டத்தில், வைப்பாறு கிராமத்தில், ஏறத்தாழ ஆயிரம் ஏக்கரில் ஒரு புதிய சிப்காட் பூங்காவினை உருவாக்குவதற்கு அரசு புறம்போக்கு நிலத்திலே முன்நுழைவு அனுமதி பெறப்பட்டுள்ளது. ஆகவே, கோவில்பட்டியைச் சுற்றியிருக்கிற பல்வேறு பகுதிகளில் குறிப்பாக, கங்கைகொண்டான் போன்ற பகுதிகளில் ஏற்கெனவே அதிகளவில் தொழிற்பூங்காக்கள் அமைக்கப்பட்டு, அங்குள்ள தொழில்முனைவோர்களுக்கு வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. எனவே, கோவில்பட்டியில் தொழில்முனைவோர்கள் அந்தப் பகுதியில் உள்ள தொழிற்பூங்காக்களைப் பயன்படுத்திக்கொள்வதற்கு எல்லா வகையிலுமான ஏற்பாடுகளையும், வசதிகளையும் அரசு செய்திருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜூ அவர்கள்.

திரு. கடம்பூர் ராஜூ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி, வேளாண்மை, தொழில், கால்நடை வளர்ப்பு ஆகியவற்றிலே முன்னேறி, தென் மாவட்டங்களில் நாளும், பொழுதும் வளர்ந்து வருகின்ற நகரமாக கோவில்பட்டி உருவாகி வருவதை மாண்புமிகு

[2022 ஜனவரி 6

அமைச்சர் அவர்கள் நன்கு அறிவார்கள். ஆனால், அவர் உதட்டளவில்தான் இது முடியாது என்று சொல்கிறார்களே தவிர, உள்ளத்தளவில் இதனை ஏற்றுக்கொள்வார் என்று நினைக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'உள்ளத்தில் நல்ல உள்ளம் எங்கள் முதலமைச்சரின் உள்ளம்'. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி S. விஜயதரணி அவர்கள்.

திருமதி S. விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் அனைத்து உறுப்பினர்களுக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டம், குறிப்பாக பெரிய தொழில்களே இல்லாத மாவட்டம் என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகவே, அங்கு தொழில் வளர்ச்சி கவனிக்கத்தக்க ஒன்றாக மாற வேண்டுமென்பது எங்கள் தொடர் கோரிக்கையாக இருந்து வருகிறது. கடந்த பத்தாண்டுக் காலமாக இந்தக் கோரிக்கையை நாங்கள் முன்வைத்திருக்கிறோம். ஆனால், பெரிய தொழில்கள் ஒன்றையும் கொண்டு வர முடியாத சூழ்நிலை எதனால் இருக்கிறது என்பதை முதலில் ஆய்வு செய்ய வேண்டும். அடுத்தபடியாக SIDCO மற்றும் SIPCOT இரண்டிற்கும் அங்கு கிளைகள் இருக்கின்றன. SIDCO–க்கு விளவங்கோடு தொகுதிக்குள்ளேயே இடங்கள் இருக்கின்றன. ஆனால், ஒன்றிரண்டு பாத்திர கம்பெனிகள்தான் அங்கே இயங்குகின்றன; நிறைய இடங்கள் காலியாக உள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், கேள்வியை சுருக்கமாகக் கேளுங்கள்.

திருமதி S. விஜயதரணி: ஆகையால் SIDCO மறு அமைப்பு மற்றும் புதிய தொழில் தொடங்கக்கூடிய, cashewnut companies–ஐ நடத்துவதற்கு, அவர்களுக்கு இடம் கொடுக்கலாம். பல்வேறு புதிய கம்பெனிகள். . .

2022 ஜனவரி 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: SIDCO, SIPCOT தொழிற்பேட்டை அமைக்கப்படுமா, அதுதான் கேள்வி.

திருமதி S. விஜயதரணி: அமைக்கப்படுமா என்பது அல்ல. அமைக்கப்பட்டிருக்கிறது. அதனைச் சீரமைக்க முடியுமா? அடுத்து, இந்தத் தொழில்களுக்கு அனுமதி வழங்கப்படுமா? என்னுடைய தொகுதியில் cashewnut companies அதிகம் உள்ளன. Undi Office என்று சொல்வார்கள் அதற்கு அனுமதி கொடுத்து, அதனைச் சீரமைக்கலாம். Raw material வாங்கித் தர முடிந்தால், தொழில்களை அங்கு வளர்க்க முடியும். கன்னியாகுமரி மாவட்டத்தில் நாங்கள் தொழில்களை வளர்க்க விரும்புகிறோம். அதுசம்பந்தமாக உறுப்பினர்கள் அதிகளவில் கேள்விகள் கேட்டிருக்கிறார்கள். அது முடியாமல் இப்போது கடைசியாக உங்களிடமும் கேட்கிறோம்; செய்து தருவீர்களா எனக் கேட்க விரும்புகிறேன்.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தென் மாவட்டங்கள் தொழில் வளர்ச்சி பெற மிகுந்த அக்கறை காட்டி வருகின்றார்கள். தமிழ்நாட்டில் அமையக்கூடிய தொழிற்சாலைகள் சென்னை போன்ற பெருநகரங்களில் மட்டும் சுற்றி அமைந்துவிடாமல், பரவலாக தமிழ்நாடு முழுவதும் இந்தத் தொழிற்சாலைகள் அமைய வேண்டும் என்பதற்காக இன்றைக்கு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். இதுவரை பெற்றிருக்கக்கூடிய முதலீடுகளை நீங்கள் உற்றுப் பார்த்தீர்கள் என்று சொன்னால், கன்னியாகுமரியிலிருந்து தொடங்கி திருவள்ளூர் வரை தமிழ்நாட்டின் நிலப்பரப்பில் உள்ள பல்வேறு மாவட்டங்களையும் உட்படுத்தி ஒருங்கிணைந்த தொழில் முதலீடுகளை நாம் பெற்றிருக்கிறோம். குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்திற்கு அருகில் இருக்கக்கூடிய நெல்லை மாவட்டத்தில் கங்கைகொண்டான் சிப்காட் பூங்காவில் பெருந்தொழிற்சாலைகளைக் கொண்டு வருவதற்கு ஆர்வம் காட்டி வருகிறார்கள். நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். ஏற்கெனவே, மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள்

முதலமைச்சராக இருந்தபோது நாங்குநேரியிலே மாண்புமிகு முரசொலி மாறன் அவர்கள் அறிவித்திருந்த அந்தப் பூங்கா, நீண்டகாலமாக கிடப்பிலே போடப்பட்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தத் திட்டத்திற்கும் இன்றைக்கு உயிர் கொடுத்து, அதனை உருவாக்கி அந்தப் பகுதியில் தொழில் நடவடிக்கைகளை மீட்டுத் தர வேண்டும் என்று எங்களுக்கு அறிவுரை வழங்கியிருக்கிறார்கள். எனவே, தென்மாவட்டங்களை ஒருங்கிணைத்து, குறிப்பாக நெல்லை, கன்னியாகுமரி, தூத்துக்குடி போன்ற மாவட்டங்களிலே தொழில் வளர்ச்சியை உருவாக்குவதற்கான ஓர் ஒருங்கிணைந்த திட்டத்தை இந்த அரசு நிச்சயமாக மேற்கொள்ளும். அப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய அவரது கருத்துகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, கன்னியாகுமரி மாவட்டத்திற்கான இத்தகைய தொழில் தேவைகளும் பூர்த்தி செய்யப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆ. தமிழரசி அவர்கள், சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி என்பது மிகவும் பின்தங்கிய தொகுதி. கிராமப்புற மாணவர்கள் அதிகம் உள்ள பகுதி. சமுதாயக் கட்டமைப்பு நெருக்கமாக உள்ள ஒரு பகுதி. மானாமதுரை பகுதியில் சிப்காட் அமைப்பதற்கான இடவசதி உள்ளது. ஆனால், அங்கு ஒருசில தொழில்கள்தான் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இடவசதி உள்ள இடத்தில் புதிதாக குறு, சிறு தொழில்களை உருவாக்கித்தந்து, எங்கள் பகுதி கிராமப்புற மாணவர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தர வேண்டும். தாயுள்ளத்தோடு ஆட்சி நடத்துகின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களின் பொற்கால ஆட்சியில் எங்கள் பகுதியில் தொழில்களை உருவாக்கித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ளதைப்போல சிவகங்கை மாவட்டம்,

2022 ஜனவரி 6]

மானாமதுரையில் ஏற்கெனவே ஒரு சிப்காட் தொழில் வளாகம் உள்ளது. அங்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, பல தொழில்கள் வர வேண்டும் என்ற ஆர்வம் அரசுக்கு இருக்கின்றது. குறிப்பாக, சிவகங்கை மாவட்டத்திலே, ஒரு டெக்ஸ்டைல் பார்க் அமைக்க வேண்டும் என்று இன்றைக்கு நாங்கள் ஒன்றிய அரசிடம் வலியுறுத்தியிருக்கிறோம். மானாமதுரை, சிவகங்கை போன்ற பகுதிகளில் தொழில் வளர்ச்சியை முன்னெடுக்கக்கூடிய வகையில், அத்தகைய தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை நிச்சயமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் இருக்கக்கூடிய இந்த அரசு மேற்கொள்ளும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 9, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

9—

மின்னாக்கிகள்

***2748—திரு. ஓ.எஸ். மணியன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் தொகுதியில் உள்ள ஊராட்சிகளில் அனைத்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கும் மின்னாக்கிகளை வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேதாரண்யம் தொகுதியில் உள்ள அனைத்து ஊராட்சிகளுக்குமான மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கும் மின்னாக்கிகளை அதாவது Generators *வழங்கப்படுமா என்று வினா எழுப்பியிருக்கிறார்கள். அதற்கான பதிலாக, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு மின்னாக்கிகள் வழங்குவதற்கு தற்போது அவசியம் எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*